# மக்கள் மறுவாழ்வு

மலர் : 6 ஆடி - ஜூலை 1988 விலை ரூ. 1-00 இதழ் : 10


## தாயகம் திரும்பியோர் மேம்பாடடைய உதவும் வகையில்

# கூட்டுறவு வங்கி புதிய திட்டங்களை உருவாக்கும்!

## நிர்வாக இயக்குனர் தகவல்!

**தாயகம் திரும்பியோர் அனைவரும் பயன் அடையும் வகையில் தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி புதிய திட்டங்களை உருவாக்கும் முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறது - இத்திட்டங்கள் மூலம் மற்றைய வர்த்தக வங்கிகளிலுள்ளது போல தாயகம் திரும்பியோர் கணக்கு வைத்துக் கொள்ளவும், கடனுதவிகள் பெறவும் வழி செய்யும் !**

தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியின் நிர்வாக இயக்குனர் திரு. எம். பாலசுப்பிரமணியன் அவர்கள் இவ்வாறு தெரிவித்தார்.

தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி தாயகம் திரும்பியோர்களுக்கு சேவையாற்றி வருகிறது. இதுவரை காலமும், தொழில் நிறுவனங்களுக்கு கடனுதவி செய்வதன் மூலம் புதிதாக வரும் தாயகம் திரும்பியோர்களுக்கு வேலை வாய்ப்புகளை பெற்றுக் கொடுத்து வந்தது.

இந்த திட்டத்தின் மூலம் வேலை வாய்ப்பு பெற்றோரில் மிகச்சிலரே பயன் பெற்றார்கள். பெரும்பான்மையோர் பல்வேறுபட்ட காரணங்களால் அவ்வேலைகளின் மூலம் தமது மறுவாழ்வை அமைத்துக் கொள்ள முடியாது போனது குறிப்பிடத்தக்கது.

1984க்குப் பின் தாயகம் திரும்பியோர் இலங்கையிலிருந்து வருவது நின்று போனதால் அத்திட்டமும் நடைபெறவில்லை.

தாயகம் திரும்பியோர்களுக்கு உருப்படியான உதவிகளை செய்யவில்லை; தனியார் தொழில் நிறுவனங்களுக்கு கடனுதவி அளித்து அதன் மூலம் வேலை வாய்ப்பளிப்பது என்ற பெயரால் தாயகம் திரும்பியோர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கு பதில 'மரண வாழ்வு' ஒன்றை ஏற்படுத்தி கொடுத்துவிட்டு என்று இந்த வங்கி மீது வெறுப்பும், அவநம்பிக்கை தாயகம் திரும்பியோர்கள் கொண்டிருக்கிறார்கள்.

வேலை வாய்ப்பு பெற்றோர்களின் பிரச்சனைகள் குறித்து பல முறை பலவேறுப்பட்ட சமூக நல அமைப்புகள் எடுத்துரைத்துள்ளன; வங்கியின் டெலிகேட்டுகளும் ஒவ்வொரு ஆண்டு கூட்டத்திலும் எடுத்துரைத்தும் இதுவரை பலன் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பிரதிநிதித்துவ பேரவை கூட்டங்கள், வங்கியின் திட்டங்களை மாற்றி அமைக்க வேண்டும்; தாயகம் திரும்பியோர்களுக்கு தகுந்த உதவிகளை அளிக்க வேண்டும் என்றும், இதன் மூலம் வியாபாரத்திலும், பிறதொழில்களிலும் ஈடுபட்டுள்ள தாயகம் திரும்பியோர்கள் உரிய பயன் அடைவார்கள் என்றும் கோரிக்கைகளை முன் வைத்துள்ளனர்.

தாயகம் திரும்பியோர்களின் நீண்ட கால கோரிக்கைகளை நிறைவேறும் வகையில் வங்கியின் நிர்வாக இயக்குனர் புதிய திட்டங்களையும், பணிகளையும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

"புதிய திட்டங்களையும் நிறைவேற்ற நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளோம்.

ஆனால் இவை மூலம் தாயகம் திரும்பியோர்களுக்கு நிவாரண பணிகள் எதுவும் செய்வதற்கென்று இல்லை. அவர்கள் செய்யும் தொழில் மேம்பாட்டுக்காகவே ஆகும்.

எந்தெந்த வகையில்வங்கியை அபிவிருத்தி செய்யலாம் என்பதும்; தாயகம் திரும்பியோர்களுக்கு அவர்கள் தொழில் முதலாவை மேம்பாடடைய எந்தெந்த வகையில் உதவலாம் என்பதுமே எமது முக்கிய தீர்மானம் ஆகும்.

இவற்றை உரிய முறையில் நிறைவேற்றும் வகையில், தாயகம் திரும்பியோர் மத்தியில் பணிசெய்யும் பல்வேறு அமைப்புகளை அழைத்து ஆலோசனைகளும் பெறுகிறோம்.

ஆலோசனைகள் பெறுவது மட்டுமே எமது நோக்கம். திட்டங்களை செயல்படுத்தும் போது இவற்றை பயன்படுத்துவதோ, வேறு வகையில் இடைத்தரகர் குறுக்கிடுவதையோ, தலையிடுவதையோ வங்கி அனுமதிக்காது" என்று தெரிவித்தார்.

மேற்படி அமைப்புகளையும் அழைத்து ஆலோசனை பெற்று வருகிறார் தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி டெலிகேட் சங்க செயலாளர் டி.எஸ். ராஜூ அவர்கள் சந்தித்த போதும் மேற் கண்ட கருத்துகளை வலியுறுத்தியுள்ளார்.

## டெலிகேட் சங்கம் ஆலோசனை

வங்கியின் கருத்துக்கிணங்க வங்கியின் டெலிகேட் சங்கச் செயலாளரும் டெலிகேட்களிடம் ஆலோசனைகள் கோரியுள்ளார். இந்த ஆலோசனைகளை திரட்டு, வங்கியின் அபிவிருத்திக்கும், தாயகம் திரும்பியோர்கள் பயன்படும் வகையில் அளிக்க வேண்டிய உதவிகள் குறித்தும் உரிய ஆலோசனைகளை வங்கியிடம் வழங்கும்.

✳

உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு.

மக்கள் மறுவாழ்வு

மலர்: 6 ஆடி - ஜூலை '88 இதழ்: 10

## மாற்று உதவி அளிக்க முன் வர வேண்டும்

தாயகம் திரும்பிய மக்கள் இந்த நாட்டுக்கு குடியேரத் தொடங்கி சுமார் 20 ஆண்டுகளாகிறது. சுமார் 5லட்சம் பேர் வந்து குடியேறி இருக்கிறார்கள்.

இவர்களுக்கு அரசு மூலமாக பல்வேறு மறு வாழ்வு திட்டங்கள் போடப்பட்டன. வியாபார, வீட்டுக்கடன், வேலை வாய்ப்பு என பல உதவிகள் அளிக்கப்பட்டன.

ஆயினும் இந்த உதவிகள் இந்த மக்களைமுழுமையாக சென்றடைந்து விடவில்லை; பத்து, பதினைந்து ஆண்டுகள் என்று ஆகியும் கூட பலர் இன்னமும் இந்த உதவிகளை பெறவே முடியவில்லை.

இம்மக்களின் அறியாமையும், அனுபவமின்மையும், இடைத்தரகர்களின் குறுக்கீடுகள், ஊழல்களும் அரசு அதிகாரிகளில் அசிரத்தை; அலட்சியமே!இதற்கு காரணம்

இதனால் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்ற நிலை, தாயகம் திரும்பியோர் தமக்குரியஉதவிகளை உரிய முறையில் பெறமுடியவில்லை என்பதோடு பெற்றவையும் உரிய முறையில் போய் சேரவில்லை என்பதோடு, ஐந்தாண்டுக்கு மேல் தா. தி.க் கான சலுகைகள் இல்லை என்ற விதியும் தாயகம் திரும்பியோருக்கென தனியாக உதவிகள் உண்டுஎன்று பிறமக்களுக்கு கிடைக்கும் உதவிகளும் சலுகைகளும் மறுக்கப்படும் நிலைமையிலே தாயகம் திரும்பியோர் அவதிபடுகிறார்கள்.

இவர்களது பிரச்சனைகளை சம்பந்தப்பட்டவர்கள் ஆராயவேண்டும். உதவி அளிப்பதோடு நின்று விடாது அந்த உதவிகள் உரிய முறையில் கிடைத்ததா? கிடைத்து முறையான வாழ்வு பெற்றிருக்கிறார்களா! என்று ஆராய வேண்டும்

உதவிகள் பெற்றும் - பெற்றாலும் ஏமாற்றப்பட்டும் பாதிக்கப்பட்டு வாழும் தாயகம் திரும்பியோர்க்கு மீண்டும் மாற்று உதவியளிக்க முன்வர வேண்டும்.

வெள்ளம், வரட்சி என்ற இயற்கை சூழ்நிலைகளால் ஏற்படும் பாதிப்புகளுக்கு, பிற மக்களுக்கு நிவாரணமும் கடன் தள்ளுபடி, மானியமும அளிப்பது போல அனுபவமின்மை, அறியாமையால் இவர்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றம், இழப்புகளை உணர்ந்தும் மீண்டும் மாற்று உதவிகள் அளிக்க முன் வர வேண்டும்.

தொடர்ந்து ஏமாற்றப்படாது உதவிகள் உரியவருக்கு சென்றடையும் வகையில் சட்டங்களையும் உருவாக்க முன் வரவேண்டும். O

## எங்கெங்கும் அந்நியமாக்கப்பட்டவர்கள் ஆய்வு நூல் - ஆங்கில மொழியில் வெளிவர விருக்கிறது !

அனைவராலும் பாராட்டப் பெற்று வரவேற்கப்பட்ட 'எங்கெங்கும் அந்நியமாக்கப்பட்டவர்கள்' என்ற ஆய்வு நூல் ஆங்கில மொழியில் வெளிவர இருக்கிறது.

1982யில் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு குடிபெயர்ந்த 'தாயகம் திரும்பிய மக்கள் மத்தியில் ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, இம்மக்கள் மத்தியில் பணிசெய்யும் 'சிராக்' அமைப்பின் மூலம் இந்த நூல் வெளியிடப்பட்டது.

ஓராண்டு காலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. டி. எஸ். ராஜு, சிவா சாந்தகுமார், எஸ். பன்னீர்செல்வம், பி. எஸ் நாதன் ஏ. சிவானந்தன், உருசுலாநாதன், குணசீலி, அந்தோனியம்மாள் ஆகியோர் ஆய்வு செய்ய, திரு ஸ்டேன் லூர்து சாமி. சிராக் செபாஸ்டியன் ஆகியோர்களது ஆலோசனைகளுடன் இந்த நூல் வெளிவந்தது.

தற்போது இந்நூலை ஆங்கிலத்தில் கொணடு வருவதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஆய்வாளர்கள் மூலம்,ஆய்வு செய்யப்பட்ட ஆண்டுக்கு பின் தாயகம் திரும்பியோர் மத்தியில் ஏற்பட்ட மாற்றங்கள், நிகழ்ச்சிகள், அவர்களது வாழ்க்கைத்தரம், மறுவாழ்வு உதவிகள், மனோபாதிப்புகள் முதலான அனைத்து அம்சங்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு தொகுக்கப்பட்டு வருகிறது.

இவையனைத்தும் சேர்க்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்ட ஒரு ஆய்வு நூலாக ஆங்கிலத்தில் மிக விரைவில் வெளிவரவிருக்கிறது. O

## நீங்கள் சந்தா செலுத்தி விட்டீர்களா?

உங்கள் சந்தாவை புதுப்பித்து விட்டீர்கள் ?

உடனடியாக செலுத்துங்கள் !

மக்கள் மறுவாழ்வு உங்களை தேடி வரும்.

### மக்கள் மறுவாழ்வு

#### சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | ரு | 1 - 00 |
| வருட சந்தா | ரு. | 12 - 00 |
| ஆயுள் சந்தா | ரு. | 100 - 00 |

மாதிரி பிரதி வேண்டுவோர் ரு. 1-க்கான அஞ்சல் தலை அனுப்ப வேண்டுகிறோம்.

முகவரி:

மக்கள் மறுவாழ்வு
அஞ்சல் பை எண். 5560
சென்னை - 600094.

# அன்று 'நாடற்றவன்'! இன்றோ 'வீடற்றவன்'!

நண்டுக்கும் வலையுண்டு,

நரிக்கும் பொந்துண்டு,

காட்டுக் குருவிகட்கும் கூட கூண்டுண்டு,

ஆனால் இந்த மனித மகன் தலை சாய்க்க ஓர் இடம் இல்லையே!

ஆம், இதுதான், இலங்கையிலிருந்து இந்திய அரசால் இங்கு அழைத்து வரப்பட்டு, இன்று நீலகிரி மலைச்சாரலில் பரந்து வாழும் மக்களின் நிலை.

1986-ம் ஆண்டு இறுதி வரை, இலங்கையிலிருந்து குடிபெயர்ந்து வந்தோரின் தொகை 4, 60, 000 பேர் (அதாவது 1 15,000 குடும்பங்கள்) இதில் பாதிக்கு மேற்பட்ட தொகையினர், நீலகிரியிலேயே குடியிருக்கின்றனர்...

மலைப் பிரதேசங்களில் சிறு தோட்டங்களுக்கு சொந்தக்காரர்களின் தயவியே, அவர்கள் கொடுத்துள்ள வீடுகளிலே குடியிருந்து கொண்டு, அவர்களின் தேயிலை, காய்கறி தோட்டங்களிலே வேலை செய்து வருகின்றனர். மிகக் குறைந்த கூலி - மிகுதியாக வேலை. என்ன துர்ப்பாக்கியமான நிலை!

சாலை ஓரங்களிலே ஓலைக் குடிசைகள் மலைச் சரிவுகளிலே மண் குடிசைகள் கற்பாறைகளின் மேலே, மழை - வெய்யிலிருந்து காப்பாற்றிக் கொள்ள - இல்லையில்லை - இரவிலே மட்டுமே தலைசாய்க்க வீடுகள் என்ற பெயரில் குடிசைகள். இந்த பரிதாப நிலையே, இன்று தாயகம் திரும்பிய மக்களுக்கு இந்த நாட்டில் உள்ளது.

'குடும்பத்தவருக்கு ஒரு வீடு தருகிறோம்' - 'வீட்டில் ஒருவருக்கு வேலை தருகிறோம்' - பிள்ளைகள் படிக்க வசதிகள் - உதவிகள் தருகிறோம்' - 'எதிர்கால வாழ்க்கையை செம்மையாக அமைத்துக் கொள்ள இந்தியா வாருங்கள்' - என்றெல்லாம் இலங்கையின் மலைப் பிரதேசத்தில், இந்திய வம்சாவழி மக்கள் மத்தியிலே, இந்திய அரசின் இலங்கை தூதுவராலயத்தின் மூலமாக, பிரச்சாரம் செய்து, பச்சைக் கொடி காட்டி, கூட்டி வந்த இந்திய அரசு, இந்த 20 வருடங்களில் இவர்களின் கதி என்னவாயிற்று என்றாவது சிந்தித்துப் பார்த்தார்களா? இல்லவே இல்லை.

21-ம் நூற்றாண்டிற்கு இந்தியாவை அழைத்துப் போகிறோம். பல லட்சம் வீடுகள் கட்டி, ஏழை மக்கள் வாழ்வில் ஒளி வீசச் செய்கிறோம். பஞ்சம், பசியை இந்த நாட்டிலிருந்து விரட்டி அடிப்போர் - என்றெல்லாம் தம்பட்டம் அடிக்கும் அரசியல்வாதிகள் - ஆசை காட்டி - பல வாக்குறுதிகளைக் கொடுத்து கூட்டி வந்த இந்த மக்களைப்பற்றியும் சிறிது சிந்திக்கலாமே!

அரசியல்வாதிகளின் வாக்குறுதிகள் தானே, காற்றில் பறந்து விட்டதுவோ! சமதர்ம சமுதாயம் அமைய பாடுபடுகிறோம். சோஸலிசத்தை நோக்கி நாடு வீறுநடைபோடுகிறது; என கூறும் இந்த அரசியல் தலைவர்கள், உலகத்திற்கே சமதர்ம சமுதாயம்- சோஸலிசம் இப்படித்தான் இருக்கும் - இருக்க வேண்டும் எனபோதித்து வரும் சோவியத் யூனியனை சற்று உற்று நோக்கிப் பார்க்க வேண்டும்.

சோவியத் யூனியனுடன் மிக நெருங்கிய தொடர்பினை தொடர்பினை வைத்துள்ள நமது பாரத தேசம், வீட்டுப் பிரச்சனையை, உலகமே வியக்கத் தக்க முறையில், சோவியத் யூனியன் எப்படி தீர்த்துள்ளது என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டாமா?

இன்று சோவியத் யூனியன் ஆண்டுக்கு 430 கோடி ரூபிள், வீடு கட்டுவதற்காக செலவழிக்கிறது. ரஷ்யாவில் நிலம் அரசுக்கு சொந்தம். நிலத்தை வாங்கவோ, விற்கவோ வேறு யாருக்கும் முடியாது. குடும்பத் தேவைக்கேற்ப, வீடுகள் கொடுக்கப்படுகின்றனவே தவிர குடும்பத்தின் பொருளாதார அடிப்படையில் வீடுகள் கொடுக்கப்படுவதில்லை. குடும்பத்தில் எத்தனை பேர் இருக்கின்றார்கள் என்பதற்கேற்ப, இக்குடும்பத்திற்கு வசதியான, பெரிய அல்லது சிறிய அளவிலான வீடுகள் வழங்கப்பட்டு வருகின்றது.

சோவியத் யூனியனுடன் ஒட்டி உறவாடும் நமது பாரதம் இந்த அத்தியாவசிய பிரச்சனையை உணராதது ஏனோ!

ஒரு தனி மனிதனுக்கு 9 சதுர மீட்டர், அதாவது 260 சதுர அடி வீதம் வீட்டு வசதி ஏற்படுத்தி கொடுக்கப்படுகிறது. மக்களுக்கு வீட்டு வசதி அளித்தலை, அரசு தனது சமூக நலப் பணியாக, கடமையாக கொள்கை வகுத்துக் கொண்டு, அதற்கு முதலிடம் கொடுத்து செயல்பட்டு வருகின்றது.

வீட்டு வசதியில், உலகில் வேறு எந்த நாடும் எட்டிப் பிடிக்க முடியாத நிலையில் இன்று சோவியத் யூனியன் திகழ்கிறது.

தாயகம் திரும்பியவர்களுக்கு 'வீடு கட்ட கடன்' என்று, ஒரு சிறுதொகையை(ரூபா 6000/-) பல தவணை முறைகளில் (பிக்கல்,பிடுங்கல் போக) கொடுத்து அரசு எதிர்பார்க்கும் முறையில் வீடு கட்ட வேண்டும் என கட்டுப்பாடு விதிப்பது- மேலும் கொடுக்க வேண்டிய மேற்படி கடனை பெறுவதற்கு படும் சிரமங்கள் - துன்பங்கள். இதில் இடைத்தரகர்களின் சுரண்டல் அரசு அதிகாரிகளுக்கும் இந்த இடைத்தரகர்களுக்கும் இடையே உள்ள நெருக்கம் - உறவு - அந்தோ! என்ன பரிதாபம். தாயகம் திரும்பிய ஒருவன் எப்படியாவது வீடுகட்டிக்கொள்ள விரும்பினாலும், இத்தனை தடைகளையும் மீறியே முயற்சிக்க வேண்டும் இன்று இது முடிகிற காரியமா! எனவே, அரசு தனது 7-வது 'ஐந்தாண்டுத் திட்டத்தில்' இந்த நாட்டின் 'வீடில்லாப்பிரச்சனையை' -விசேடமாக தாயகம் திரும்பிய மக்களுக்கு - இந்திய அரசால் ஆசை வார்த்தைகள் காட்டி வந்த இவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கு, அதி முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என நாம் எதிர்பார்க்கிறோம் இது அரசின் அத்தியாவசிய கடமையாகும்.

1964ம் ஆண்டு 'இலங்கை இந்திய ஒப்பந்தம்' ஏற்படும் வரை நாடில்லாது, 'நாடற்றவன் என்ற நிலையில் வாழ்ந்த இந்த மக்கள் இன்று குடியிருக்க வீடில்லாது 'வீடற்றவன்' என்ற நாமத்துடன் வாழ்ந்த இந்த மக்கள் இன்று. குடியிருக்க வீடில்லாது 'வீடற்றவன்' என்ற நிலையில் வாழ்வதை மாற்ற வேண்டிய அவசியமும் அவசரமும் இந்திய அரசுக்கு உண்டு என்பதை வலியுறுத்த விருப்புகிறோம்.

பாருக்குள்ளே நல்லநாடு இந்த பாரத நாடு. ஆனால் இன்று பஞ்சமும்,பசியும் தலை விரித்து ஆடுவதும் இந்த பாரத நாட்டில் தான் என்று இந்த நிலை மாறுமோ! ○

எம். சந்திரசேகரன்
செயலாளர்
மலையக மக்கள் மறுவாழ்வு மன்றம்

# தாயகம் திரும்பியோர் காலனியை கா
# ஏர்பூட்டி உழுது பயிரிடப்படும் காட்

## முன்னுரை

இலங்கைத்தமிழர் பற்றி இன்று எங்கும் பேசும் சூழ் நிலையில், இலங்கையிலிருந்து இந்த மண்ணுக்கே உரியவர் களாய், மண்ணின் மைந்தர் களாய் - தமிழகம் திரும்பிய ஒரு மக்கட் பிரிவினர் பற்றி எவருமே கண்டுகொள்ள வில்லை. இலங்கையிலும் ஒதுக் கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, ஓட்டு ரிமை கூட மறுக்கப்பட்ட இம் மக்கள், தமிழகத்திலும் மறக்கப் பட்டு, வஞ்சிக்கப்பட்டு புறக் கணிக்கப்பட்டவர்களாய் வாழ்ந்து கொண்டிருக்கிறார் கள், ஒரு நூறு, இருநூறு பேர் களையோ, ஓராயிரம் ஈராயிரம் பேர்களையோ அல்ல. சுமார் ஐந்துலட்சம் தாயகம் திரும்பி யோர்களைத்தான் குறிப்பிடு கிறோம். இலங்கைத் தமிழருக் காக போட்டி போட்டுக கொண்டு போராடும் அரசியற் கட்சிகள் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய இந்த மக்கள் மீது கடைக்கண் வீச்சினைக் கூட காட்டவில்லை.

அந்நியமண்ணின் அடிமை வாழ்வின். அவலங்களையெல் லாம் அந்நாட்டின், தலைமன் னார் துறைமுகக் கரையில் அழுதுதீர்த்துவிட்டு, எண்ணி லடங்கா ஏக்கங்களுடனும், சுதந்திரத் தாயகத்தின் சுக மான வாழ்வு பற்றிய கற்பனை களோடும் ராமேஸ்வரம் கடற் கரையில் காலடி வைத்து கையெடுத்துக் கும்பிட்டுவிட்டு மண்டபம் முகாமுக்குள் நுழை யும் இந்தத் தாயகம் திரும்பி யோர் இன்று, தமிழகத்தின் வீதிகள் தோறும் மட்டுமன்றி ஆந்திரா, கேரளா, கர்நாடகா, முதலான பிற மாநிலங்களிலும் படும் துன்ப துயரங்கள் சொல் லில் அடங்காதவை.

1964-ம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட சாஸ்திரி - சிறி மாவோ ஒப்பந்தப்படி அங்கு வாழ்ந்த மலைத்தோட்டத் தொழிலாளர்கள் உள்ளிட்ட இந்திய வம்சாவழித் தமிழர் களில் இந்தியப் பிரசாவுரிமை வழங்கப்பட்டு அங்குள்ள இந்தி யத் தூதரகத்தினால் இந்தியக் கடவுச்சீட்டு கொடுக்கப்பட்ட வர்கள் இவர்கள்.

1967 ம் ஆண்டு முதல் இந்தியாவுக்கு இவர்கள் குடி பெயர்ந்த வண்ணம் (கடத்தப் பட்ட வண்ணம்) இருக்கிறார் கள். அந்த ஒப்பந்தப்படி இவர் களுக்கு இந்திய அரசு மறு வாழ்வு உதவிகளை அளிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட மாநில அரசுகள் மறுவாழ்வுத் திட்டங்களை அமல்படுத்த வேண்டும். இதற்காக வியா பாரக் கடன், வீட்டுக்கடன், தாயகம் திரும்பியோர் கூட்டு றவு வங்கித் திட்டம், தனியார் மற்றும் அரசு நிறுவனங்களில் வேலைவாய்ப்பு முதலிய பல் வேறு மறுவாழ்த் திட்டங்களை மத்திய அரசு அறிமுகப்படுத்தி யுள்ளது.

ஆனால் இந்த மக்களின் வாழ்நிலைமைகளின் மெய்த் தோற்றங்கள், இவை அனைத் தும் 'மறுவாழ்வு' அளிப்பதற் குப் பதிலாக இருந்த வாழ்வை யும் மறுத்த 'வாழ்வு மறுப்புத்' திட்டங்களாகவே இருப்பதை உணர்த்துகின்றன. இம்மக்க ளோடு தொடர்பு கொண்டுள்ள எவருமே இதை மறுக்க முடி யாது.

இந்த மக்களின் தலைவிதி இலங்கை மண்ணிலேயே அரசி யல் ரீதியாக தீர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்ற உண்மைக்கு அப்பால், தாயகம் திரும்பு வோருக்கான மறுவாழ்வுத் திட்டங்களைத் திட்டமிடுதலில் இருந்த அடிப்படைக் குறை பாடு ஒருபக்கம் இருக்க, இடைத்தரகர்களின் தொல்லை காண்ட்ராக்டர்களின் ஏமாற்றல், அதிகாரிகளின் ஊழல், அசி ரத்தை என்பனவே தாயகம் திரும்பியோர் நடைமுறையில் எதிர்நோக்கும் மிகப்பெரிய பிரச்சினையாக உள்ளன.

- இவ்வாறு இக்கட்டுரையில் இடம் பெறும் காலனியை ஆய்வு செய்த மக்கள் ஒருமைப் பாட்டுச் சங்கத்தினர் (பி. எஸ். ஏ புத்தரசநல்லூர்) குறிப்பிடு கிறார்கள் இந்த ஆய்வினை துண்டுப்பிரசுரமாக கொண்டு வர முயற்சி மேற்கொண்டுள்ள னர்.

திருச்சியிலிருந்து நாமக்கல் செல்லும் பாதையில் தொட்டி யத்தில் இறங்கி செவந்திப்பட்டி சாலையில் இரண்டரை கிலோ மீட்டர் தூரம் சென்றால் கொச வம்பட்டி கிராமத்தை அடைய லாம். முசிறி வட்டாட்சியார் எல்லைக்குள் வரும் இக்கிரா மத்தின் பூமி வானம் பார்த்த பூமி. வேறு பொக்கிஷம் எதுவு மில்லாமல் கள்ளங்கபடமற்று வாழும் இக்கிராம மக்கள் மத்தி யில் எந்தவிதச் செல்வாதார மும் இல்லாமல் இலங்கையி லிருந்து சிறிமா - சாஸ்திரி ஒப் பந்தப்படி தாயகம் திரும்பிய மக் களையும் வாழவைக்க ராம்சிங் என்பவருக்கு எப்படி எண்ணம் தோன்றியதோ?

இந்த எண்ணத்தை நிறை வேற்ற தொட்டியத்தில் வசிக் கும் கண்ணையனுக்கு கொச வம்பட்டி கிராமத்தில் சொந்த மாக இருந்த மானாவாரி நிலத்தைத் ராம்சிங் கிரயம் பண்ணினார். பின்னர் தாயகம் திரும்பியோர்க்கு ஒரு கால னியை உருவாக்க "அரும்பாடு பட்டு" தாயகம் திரும்பிய மக் களையும், (ஏன், அரசு அதி காரிகளையும் கூட) ஏமாற்றி வந்திருக்கிறார். தற்போது இவ ரின் முகவரி கூட இந்த மக்க ளுக்கு தெரியாது.

## வீடு கட்டலாம் வாங்க! வாங்க!

ராம்சிங்க்கு கொசவம்பட்டி கிராமம் யதேச்சையாக கண் ணில் பட்டிருக்க வேண்டும். அப்புறமாக "கொசவம்பட்டி காலனி" என்று செல்லமாக அழைக்கப்பட்டு வரும் இக் காலனியின் கதை கண்ணீர் கதை தொல்பொருள் ஆய்வு களால் மட்டுமே இந்த கால னியை இன்று கண்டுபிடிக்க முடியும்.

இதைத்தவிர 'கோடு நாடு' ன்னு போயோ போலீஸ் வக்கீ லுன்னு அலைஞ்சோ இடத்தைப் பெற முடியுமான்னு" இதில் சம்பந்தப்பட்ட தாயகம் திரும் பியவர்களுக்கே சந்தேகம்.

## ஏமாமற்றும் ! சந்தேகம் !!

'அது ஏங்க நமக்குச் சிரமம்? உள்ள பொழப்பும் போயி டும்ன்னு' அதைப்பற்றி விசாரிக் கும் நம்மிடம் மிக அன்பாக தாயகம் திரும்பிய நபர்கள் சொல்லும் போது அவர்களின் குரல் உணர்ச்சிக் கொந்தளிப்பு களால் கமறல் அடிப்பதை கவ னிக்க முடிகிறது. இந்த வசனங் களின் ஏக உள்ளடக்கமாக இருப்பது ஏமாற்றம் தவிர வேறு எதுவுமில்லை.

சுமார் மூன்று வருடங் களுக்கு முன்னால் நாங்கள் இக்காலனியை நேரில் காண நேர்ந்த போது அரைகுறையாக சுவர்கள் எழுப்பப்பட்ட வீடு களும், ஒருபக்கமோ, இருபக் கமோ சுவர்கள் எழுப்பப்பட்ட வீடுகளும் கதவுகள் மட்டும் பூட்ட வேண்டிய வீடுகளும் என்று ஏராளமாய் இருந்தன. இவைகளுடன், அடிமனைகள் தோண்டப்பட்டும் சரிந்தும், வீட்டுக் கூரைகள் இடிந்தும் நொறுங்கியும், ஒருபக்கம் சாய்ந் தும், மனையின் தளங்கள் புழுதிபட்டும் ஆங்காங்கே சுவர் கள் சரிந்தும் அநேகமாக கைவிடப்பட்ட நிலைமையை உணர்த்தும் அறிகுறிகளும் தென்பட்டன குறிப்பாக செங் கள் குவியல்கள் மத்தியிலும் கருங்கல் குவியல் மத்தியிலிருந் தும் கருவேலக்செடிகளும்,

# காணவில்லை - அங்கே ட்சிகள் காணீர் !

எருக்கஞ்செடிகளும் முளைத்து காற்றில் நீட்டிக் கொண்டிருந்தன. அத்துடன் சோளப்பயிர்களும், கம்பும், முளைத்து இருந்தன.

இப்பொழுது

## காலனியை காணவில்லை

இரண்டாவது முறையாக மூன்று வருடங்கள் கழித்து வந்து பார்க்கும் போதும் எந்த அடையாளமுமே இல்லை. யாவும் அதிசயமாக மறைந்து விட்டன.

சுவர்கள் இல்லை! வீடுகள் இல்லை! அடிமனைகளே இல்லை. சரி இந்த வீடுகள் எல்லாம் எங்கே போயிற்று?

அப்போது பாழடைந்த தொல்பொருள் இலாகாவால் தோண்டி பார்க்கப்பட்ட கட்டிடங்களைப் போல இடையிடையே காட்டுச் செடிகளும் நாட்டுச் செடிகளுமாக இருந்த கொசவம் பட்டி காலனி தற்போது தரைமட்டமாக்கப்பட்டு உழுது (பயிரிடப்பட்டு) வருவது நம்முன் கண்ணெதிரே விரிந்து தெரிகிறது

சரி, இந்த அதிசயத்தை; அல்ல அக்கிரமத்தை தெரிந்து கொள்ள வேண்டும் என்ற முடிவோடு, நாங்கள் இக்காலனியின் சொந்தக்காரர்களை கிராமம் கிராமமாக தேடியலைந்தோம்.

## சொந்தக்காரர்கள் எங்கே போனார்கள்?

"இந்தக் காலனியை இடித்துத்தள்ளி உழுது விதைத்து வருவது யார்? ராம்சிங் என்பவர். எங்கே? 47 வீடுகள் கட்டுவதற்கு அடிமனைகள் போடப்பட்டு இருந்தனவே, அந்த வீடுகளின் உரிமையாளர்களான தாயகம் திரும்பிய மக்கள் எங்கே? இக்காலனியில் வீடுகள் கட்டுவதற்கு ரொக்கம் ரொக்கமாக பணம் ஷாங்ஷன் பண்ணிய மூசிரி வட்டாட்சியர் அலுவலகம் எங்கே? இதைக் கேட்பார் இல்லையா? கேட்க ஒரு நாதியில்லையா?

இவைகள் எல்லாம் மனக்குமுறல்களே! நியாயங்களின் மனக்குமுறல்! நேர்மையாக வாழவிரும்பும் எவருக்கும் இக்கேள்விகள் பிழையாகத் தோன்றாது! இவ்வளவு இலகுவாக நம் மத்தியில் ஏமாற்றுகள் மோசடிகள் நிலவுகிறது. அரசாங்க அலுவலகங்களில் தான் இவைகள் ஊற்று எடுக்கின்றனவோ?

ஒரு நாட்டிலிருந்து குடிபெயர்ந்து வந்த மக்களின் இயல்பான அறியாமை, எளிமை, நம்புந்தன்மை இவைகள் எல்லாவற்றையும் சாதகமாக்கிக் கொண்டு, அவர்களுக்கு என்றும் அரசால் ஒதுக்கப்பட்ட சலுகைத்திட்டங்களை 'ஏப்பம்' விடும் இந்த நபர்கள் எப்படி தமது 'கண் காணிப்பு ஜனநாயக'த்தின் கீழ் தப்பி வாழ்கிறார்கள்?

## இடைத்தரகும் லஞ்ச லாவண்யமும்

நமது நாட்டு அரசாங்கத் திட்டங்கள் சேர வேண்டிய மக்களுக்கு சேராமல் எவ்விதம் வீண் விரயமாகின்றன? அல்லது தோல்வியடைகின்றன? அரசு அலுவலகங்களில் மருந்துக்குக்கூட காணக்கிடைக்காத சேவை மனப்பான்மையின விளைவாக, சர்வ சாதாரணமாக புகுந்து விளையாடும் இடைத்தரகு. லஞ்சம், பின் வாசல் வழிகள் மூலம் வளர்ந்து விட்ட ஊழல்களின் உச்ச நிலையே இந்த கொசவம்பட்டி காலனி கதையாகும்.

நாங்கள் இம்மாவட்டத்தில் முசிறி வட்டாட்சியார் பகுதியிலும், அதற்கு அப்பாலும் வாழும் தாயகம் திரும்பிய மக்கள் அநேகரை சந்தித்து கொசவம்பட்டி காலனியில் சம்பந்தப்பட்ட தாயகம் திரும்பிய நபர்கள் பலரை கண்டுபிடித்தோம். தொண்டைக் குழிவரை சோகங்களே நிரம்பிப்போன இவர்கள் சொன்ன தகவலின்படி, மேலும் பல தாயகம் திரும்பியோர், குடியிருந்த ஒரு வீடோ, வாழ்வதற்கு ஒரு தொழிலோ, இல்லாமையால் வேறு பல இடங்களுக்குச் சென்று விட்டார்கள். பெரும்பாலும், கொடைக்கானல் நீலகிரி பகுதிகளுக்கு - அவர்களை கண்டு பிடிப்பது சிரமம்.

இன்றும் பலர் வெளிமாநிலங்களிலேயே வேறு தொலை தூரங்களிலோ சென்று குடியேறியவர்கள் - இந்த முசிறிக்கே காலடி வைக்காதவன் கூட வீடுகட்ட லோன் எடுத்திருக்கிறான். ராம்சிங் ஆவ்வளவு வேலை பார்த்திருக்கிறான். என்று இவர்கள் அங்கலாய்கிறார்கள்!

## குமுறும் மக்கள்

கொசவம்பட்டியின் காலனியில் தாம் கொலுவிருக்கப் போகிறோம் என்ற நம்பிக்கையில் புரோக்கர்களிடமும் காண்ட்ராக்டர்களிடமும் தமது பயண ஆவணங்களை - யெல்லாம் ஒப்படைத்துவிட்டு ஏமாந்துபோன தாயகம் திரும்பியோரை தேடிக் கண்டுபிடிப்பதென்பது ஒன்றும் அவ்வளவு சுலபமானதல்ல. 'சீச்சீ இந்தப் பழம் புளிக்கும்' என்று நீலகிரி போன்ற மலைப் பகுதிகளுக்கு நிரந்தரமாக மாறிப்போனவர்கள் சிலர் புரோக்கர்மாரிடம் கேட்டுக் கேட்டுப் பார்த்தும் அதிகாரிகளிடம் மனுமேல் மனுகொடுத்தும் பயனேதும் இல்லாத நிலையில் போனது போகட்டும் எப்படியாவது பிழைப்போம் என்று நகர்ப்புறம் நாடி ஓடியவர்கள் சிலர், என்றைக்காவது ஒருநாள் வீடுகள் கட்டி முடித்து நம்மிடம் ஒப்படைப்பார்கள் என்று நப்பாசையில் அரசியல்வாதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் இன்னமும் மனு எழுதிக் கொண்டு அக்கம் பக்கத்து ஊர்களில் குடியேறி ஏங்கிக் கொண்டிருப்பவர்கள் சிலர். இந்த மூன்றாம் பிரிவினரில் சிலரையே நம்மால் சந்திக்க முடிந்தது.

## பாதிக்கப்பட்டோர் தெரிவித்தவை

தொட்டியம் பாலசமுத்திரத்தில்இருக்கும் தாயகம் திரும்பிய திரு. பெரியசாமி என்பவர் கூறியது-

"நான் 1975-ல் இந்தியா வந்தேங்க. ஒரு வீட்டு லோன் கேட்கிறதுக்காக முசிறி போயிருந்தேனுங்க அப்ப வீடு கட்ற காண்டிராக்டர் ராம்சிங்கும், புரோக்கர் ராமராஜும் என்னை சந்திச்சாங்க நீங்க தொட்டியம் தானான்னு கேட்டாங்க ஆமாங்கன்னேன். அதற்கு, இலங்கை அகதிக்கு நாங்க காலனி கட்டறோம். உங்க குடும்பக் கார்டு பாஸ்போர்ட் எல்லாம் குடுங்கன்னு கேட்டாங்க. குடும்பக் கார்டு பாஸ்போர்ட் வாங்கிட்டு 5 வெள்ள பேப்பர்ல கையெழுத்து வாங்கினாங்க கொஞ்ச நாள் கழிச்சி லோன் வந்தாச்சி அப்படின்னு ராமராஜ் கூப்பிட்டார். போயி போய் இரண்டு தவணையா ரூ. 6,000 வாங்கி அவுங்களே வச்சிக்கிட்டாங்க அப்புறம் எனக்கு கட்டின வீட்டை போய் பார்த்தேன் பவுண்டேசன் மட்டும் போட்டிருந்தாங்க சீக்கிரமா ஆயிருமான்னு கேட்டதற்கு மூனு மாசத்தில் வேல முடுஞ்சிடும்னு சொன்னாங்க. அதற்கப்புறம் அவுங்க யாரையுமே காணோம் நானும் அவுங்கல தேடி அலைஞ்சி ஓஞ்சி போயிட்டேங்க இனி எப்படிங்க அந்த காலனி கட்டி முடிச்சுருவாங்களா?" என்று நம்மிடம் கேட்கிறார்.

துளையாநத்தம் கிராமத்திலே இப்போது வசித்து வரும் வள்ளியம்மை என்னும் விதவைத் தாய், தாயகம் திரும்பிய ஒரு வாரத்துக்குள்ளேயே புரோக்கரிடம் பாஸ்போர்ட் முதலிய ஆவணங்களையும் கையெழுத்தும் போட்டு கொடுத்து விட்டு ஏமாந்து போயிருப்பவர். "உசுரு மட்டுந்தாங்க புடுங்கல மத்த எல்லாத்தையுமே புடுங்கிபுட்டானுங்க" என்று வேதனைப்படும் இவர், தாயகம் திரும்பி பத்து வருடங்கள் ஆகின்றன.

(அடுத்த இதழில் முடியும்)

சிறுகதை

# ஒரு பிடி தேயிலை

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

இரண்டாவது மெத்தையில் வரிசை வரிசையாக நீள் சதுரத்தில் அகலமான தட்டுக்கள் ஜான் அகல இடைவெளி விட்டு சாக்குப் படங்குகளால் கட்டப்பட்ட தட்டுக்கள்.

முதல் மெத்தையிலிருந்து இரண்டாவது மெத்தைக்கு "ஷிப்ட்டில் வந்த கொழுந்தை கயிற்று சாக்கிலிருந்து கீழே கொட்டுகிறார்கள் - சொத சொத வென்று நீர் சொட்டுகிறது

நீர் சொட்டச் சொட்ட கொழுந்தை அள்ளி அந்த படங்குத்தட்டில் திணித்து, நீளமான தட்டுப்பலகையில் தட்டெங்கும் பரப்புவிடுகிறார்கள் நீர் வடிந்து வற்றி கொழுந்தின் இலைகள் காய்ந்து காற்றில் வாட (உலர) வேண்டும்; அரைப்பதற்கு பதமாக வேண்டும்.

இலை தட்டி முடிந்து விட்டது.

ஈர இலைகளை அள்ளி அள்ளி தட்டுக்களில் போட்டுத் தட்டியதில் கை விரல்களெல் விறைத்து மறுத்து போயின.

தலைத் துண்டை அவிழ்த்து உடம்பைத் துடைத்துக் கொண்டே கண்ணாடி ஜன்னல்களை திறந்து கொழுக்கிப்போட்டான்

குளிர்காற்று குப்பென்று அடித்தது; உடல வெட வெடத்தது

வெளியே பார்த்தான் இருள் மெல்ல இறங்கத் தொடங்கி இருந்தது. தூரத்தே 'வரைக் கட்டு'மிகுந்த மலை. தேயிலை காடு அதை 'குருட்டு மாசி' மெல்ல மெல்ல தழுவி மூடிக் கொண்டிருந்தது.

இந்த கொழுந்தும் அந்த மலைக் கொழுந்து தான்.

'ஓரே வழுக்கப்பாறை. கொஞ்சம் கால் தவறினாலும் உருண்டு விழ வேண்டியது தான். உயிர புடிச்சிக்கிட்டுத் தான் கொழுந்தெடுக்கனும் மழக்காலமூனா கஷ்டம். இந்த கஷ்டம் இந்த கங்கரணி கண்டாக்குக்கெல்லாம் எங்க தெரியப் போவுது? ...வேசமவனுக' என்று மனதுக்குள் கறுவிக் கொண்டான்.

அடுத்த கணம் அவனுக்கு இன்னொரு சம்பவமும் நினைவுக்கு வந்தது.

ஐந்தாறு மாதத்துக்கு முன்னாலே இப்படித் தான் இதே மலையில் ஒரு பெண் - நிறை மாத 'பிள்ளைத்தாச்சி' வழுக்கி விழுந்துட்டாள். பிள்ளை வயிற்றுக்குள்ளேயே இறந்துவிட்டது. ஆப்ரேஷன் பண்ணித் தான் வெளியே எடுத்தார்கள். பின்னாலே இரண்டு மூன்று மாசத்திக்குள்ளே அந்த பெண்ணும் இறந்துப் போனாள்.

இப்படி அவனுக்கு நினைவு தெரிந்த காலத்திலிருந்து எத்தனை சம்பவங்கள் ஒவ்வொன்றும் நினைவுக்கு வர மனம் கசக்கிறது.

" யாண்டா வேலு நேரமாகலயா? மழை இருட்டு அப்புறம் தட்டி தடவிக்கிட்டு ஊட்டுக்கு போகோனும்"

அவனோடு வேலைசெய்யும் - அவனுடைய லயத்தில் இருக்கும் பழனி அவனை கூப்பிட்ட பின் நினைவுகளை மீட்டுக் கொண்டே சட்டையை மாட்டினான். தலையில் துண்டைக் கட்டினான்.

காலை 'தேத்தண்ணி' கொண்டு வந்திருந்த 'தேத் தண்ணி போத்தலை' எடுத்து கொண்டான்.

வெற்றுப் போத்தல் - போத்தலை எடுத்தும் மீண்டும் பாலில்லாத தேத் தண்ணீர் நினைவு வந்தது.

நினைத்து கொண்டவன் மனக் கண்ணில் ரத்தம் நிறப் பானம் தெரிந்தது; நாக்கும் நாசியும் பரபரத்தது.

❦

மெத்தைகளில் - தட்டுகளில் நீர்வற்றி, வாடி வதங்கி அறவைக்கு பதமாக இருந்த அந்த கொழுந்துகள் மறுநாள் -

'ரோதை' காம்பராவில் கொட்டப்படுகிறது.

கொட்டப்பட்ட கொழுந்துகளை வெங்கல ரோதைகளில் அகன்ற வாயினுள் திணிக்கிறார்கள்.

சின்னதும், பெரியதுமான நான்கு ரோதைகள் - வளைந்து விளைந்து சுற்றுகிறது. ரோதைகளுக்கு அடியில் பல்லுப்பல்லாய் தட்டுகள் ரோதையின் வாயிலினூடாக உள்ளே செல்லும் கொழுந்து அந்த தட்டுகளில் விழ ரோதைகள் அவற்றை சுற்றி சுற்றி அரைக்கின்றன - மாவரைக்கும் கருங்கல் உருளை மாதிரி.

நான்கு ரோதைகளிலும் நான்கு பேர்கள்; வேலை செய்கிறார்கள்.

சட்டை அணியாத உடம்பில் வியர்வை வழிகிறது; வியர்வையில் மேலே ஒட்டும் கொழுந்திலைகளை தட்டித்

**'தேனூரன்'**

தட்டி விடுகிறார்கள். இடையிடையே வியர்வையை தலையில் கட்டியிருக்கும் துண்டால் துடைத்துக் கொள்கிறார்கள்.

அரைப்படும் கொழுந்துகளிலிருந்து நீர் வடிகின்றது; நுரைத் தள்ளுகிறது.

அரைக்கப்பட்ட கொழுந்து. ஆடி ஆடி இயங்கிக் கொண்டிருந்த சல்லடை தட்டில் கொட்டப்படுகிறது.

அது சலித்தெடுக்கிறது; அரைப்படாத சலிக்க முடியாத பெரிய இலைகள் மீண்டும் அந்த ரோதைகளில் கொட்டப்படுகிறது.

சலித்தெடுக்கப்பட்ட தேயிலை அடுப்பு கம்பராவுக்கு கொண்டு செல்லப்படுகிறது,

*

இந்த வேலையெல்லாம் வேலுவுக்கு **அத்துப்படி.** ஸ்டோரில் இலை தட்டுவதிலிருந்து தேயிலைத் தூளை பெட்டியில் அடைத்து, நம்பர் பிளேட்டை வைத்து மை பூசுவது வரை எல்லாம் தெரியும்.

தோட்டத்தில் பேர் பதிந்து ஐந்தாறு வருடங்கள் தான் மலையில் செய்திருப்பான். அதற்கு பின்னால் கிட்டத்திட்ட பன்னிரண்டு வருடங்களாக ஸ்டோரில் தான் வேலை பார்க்கிறான்.

அந்த தொழிலே அவனுக்கு எல்லாம். . உலகமே அதுதான்.

அவன், அவனுடைய சக தொழிலாளர்களின் உழைப்பில் உற்பத்தியான அந்த தேயிலை பெட்டி பெட்டியாக அடைக்கப்பட்டு லாரியில் ஏற்றப்படும் போது அவன் அடைகிற திருப்தி...!

டீ மார்க் கட்டில் அவர்கள் உற்பத்தி செய்யும் தேயிலைத் தான் கூடுதல் விலைக்கு விற்றிருக்கிறதென்று, பேப்பரை பார்த்து டீ மேக்கர்கள் சொல்லும்போது கொள்கிற மகிழ்ச்சி..

அரிசிக்குறுணை அளவுதான் - தூள்தூளாக, குருமையாக இருக்கும் அத்தேயிலையை நினைக்கும் போது நரம்பு புடைகிறது. ஒரு சுறுசுறுப்பே வந்து விடுகிறது தேத்தண்ணியே போது. சாப்பாட்டைப் பற்றி கவலை இல்லை; அதிலேயே பிறந்து வளர்ந்தவர்கள். ஆனாலும்...

பெரிய டீ மேக்கரிடம் கேட்கலயா?

'இந்த டீ மேக்கர் தரவே மாட்டான். இதற்கு முன்னாலே இருந்தவராவது கேட்டால் குடுப்பார். அவன் சிங்களவன் என்றாலும் கொஞ்சம் இரக்க குணமுள்ளவன்.

இவன் தமிழன் தான் பேர் என்னவோ சுந்தரலிங்கம்; தொழிலாளி என்றாலே இவனுக்கு இளக்காரம்.

யாருக்கும் ஒரு துளி கூட கொடுக்க மாட்டான்.

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் மூட்டை மூட்டையாக நடு ராத்திரியில் கடத்துவதிலே சரியான ஆள்; காய்கறி தோட்டத்திற்கு கொண்டு போகிற தேயிலை குப்பையைக் கூட விடுவதில்லை. அதையும் ஆளை வைத்து, தடியால் அடித்து தூள் தூளாக்கி கடைகளிலே விற்றுவிடுவான் - இந்த தோட்டத்துக்கு வந்த கொஞ்ச நாளிலே காணி வாங்கி வீடும் கட்டி விட்டான் என்றால் எப்படி ?

வேலுவுக்கு மனசு குமுறுகிறது. காற்று, மழையில நனைந்து வெயிலிலே காய்ந்து - மலை ஏறி நெற்றி வியர்வை சிந்தியும் ஒரு நேரம் போட்டுக் குடிக்கக் கூட கொஞ்சம் தேயிலைத்தூள் கிடைக்க மாட்டேன் என்கிறது - அதுவும் மட்டரக டஸ்ட்டுக்கும் பெரும் பாடாக இருக்கிறது.

✻

அடுப்புக் காம்பராவில் தேயிலையில் வாசனை கமகமக்கிறது

அரைத்து, சல்லடையில் சலிக்கப்பட்ட தேயிலை இங்கே யந்திர அடுப்பில் கொட்டப்படுகிறது.

இதில் உலர்ந்து, காய்ந்து மொறு மொறு வென்று கருமைப பதத்தில் 'தேயிலை' ஆய்விடுகிறது. தரம் வாரியாக பிரிக்கப்படுகிறது

ஒட்டுப்பலகைப் பெட்டியில், உள்ளே ஈயத்தாள் பரப்பி தேயிலை கொட்டப்பட்டு அடைக்கப்படும் ஒவ்வொரு பெட்டியில் மேலும் பெயர், தரம் நிறை எல்லாம எழுதப்பட்டு 'மேடின் ஸ்ரீலங்கா' என்று நாட்டுப்பேரும் பொறுக்கப்பட்டு விடுகிறது.

அன்றைக்கு அந்த வேலைதான் வேலுவுக்கு

அவனுக்கு அன்றைக்கு என்றுமில்லாத ஓர் துடிப்பு

'இன்றைக்கு வசதியாக இருக்கிறது. கொஞ்ச தேயிலை அள்ளிக் கொண்டுப் போனால் என்ன?'

அதை நினைக்கும் போதே மனம் படபடத்தது. சுற்றி சுற்றி பார்த்தான். அத்தனை பேரும் வேலையில் மும்முரமாக இருந்தனர். அவனை யாரும் கவனித்ததாக தெரியவில்லை

தான் கால்சட்டை பாக்கெட்டில் ஒரு பிடி அள்ளிப் போட்டுக் கொண்டான்.

வேலை முடிய கொஞ்சநேரம் தான் இருந்தது.

ஐந்தோ, பத்தோ நிமிடங்கள் இருக்கும்,

'வேலு! வேலு! உன்ன டீ மேக்கர் ஐயா கூப்புடுறார்'' என்று யாரோ குரல் கொடுத்தார்கள்

வேலுவுக்கு ' திக்''கென்றது.

'டீ மேக்கர் ஐயா பார்த்து விட்டாரோ? இல்லை யாராவது வேண்டாதவங்க சொல்லிட்டிங்களா? இல்ல அடுத்த சங்கத்துகாரன் எவனாவது பார்த்துட்ட கோள் சொல்லிட்டானோ?'

வியர்க்க வியர்க்க ஸ்டோர் ஆபீஸுக்கு சென்றான்

டீ மேக்கர் அவனைத்தான் எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தார் போல இருக்கிறது.

''என்னா வேலு எத்தன நாளா இந்த வேல?'' என்ற வார்த்தைகள் தான் அவனை வரவேற்றது

வேலுவுக்கு ஏதும் சொல்லத் தோன்றவில்லை; நெற்றியில் வியர்வை ஒழுக, நா வறண்டு நின்றான்.

''ஒவ்வொரு நாளும் இப்பிடி தான் கால்சட்டைப் பாக்கட்ல தேயிலை அள்ளிக்கிட்டு போறியா?''என்று அதட்டினார்

''இல்லை ஐயா '' வேலுமென்று விழுங்கினான்.

''இனிமே ஒன்றும் பேசுறதற்கு இல்ல. உனக்கு வேல இல்லை வீட்டுக்கு போ''என்று சொல்லி விட்டார்.

எல்லாம் பத்து பதினைந்து நிமிடங்களில் நடந்து முடிந்து விட்டது. கொஞ்சம்கூட அவன் எதிர்பபார்க்கவில்லை.

இத்தனை காலம் இல்லாதது. அவன் தாத்தா அப்பா எல்லாம் இந்த தோட்டத்தில் தான் வேலை செய்தவர்கள்; வாழ்ந்தது எல்லாம் அவர்கள் வாழ்க்கையே இங்கே தான் முடிந்தது. இந்த காலத்துல இப்படியொரு தப்பை பண்ணியது இல்லை.

✻

வேலை போன கவலையோடு குறுக்குப்பாதையில் ஏறிக் கொண்டிருந்தான்.

அவனுக்கு 'திக்' கென்றது.

அது புதைகுழி - தோட்டத்தில் இறந்தவரை புதைக்கும் இடம். புதைப்பதற்கென்று உரிய இடமில்லை.

குறுக்குப்பாதையின் இருமருங்கிலும் வளர்ந்து நிற்கிற தேயிலைச் செடிகளில் தூர்களில் பேருமன் புதைக்கப்படுகிறார்கள்

அவனுடைய தாத்தா, பாட்டி அம்மா, அப்பா எல்லாம் அங்கே தான் புதைக்கப்பட்டார்

அந்த இடங்களின் அடையாளமே தெரிவில்லை

தேயிலைச் செடிகள் தான் செழித்து கம்பீரமாக வளர்ந்து பச்சை பசேலென்றிருந்தன.

சுவைக்க விரும்பிய பாலில் லாத - ரத்தம், மாதிரி இருக்கும் 'தேத்தண்ணி' பானமே இப்போது அவனுக்கு கசந்தது - வெறுத்தது.

தன்னைப் போன்ற தொழிலாளிகளின் உழைப்பில் உற்பத்தியான இந்த தேயிலை அண்ணியமானதாக அனுபவிக்க முடியாது....

✻

## வரப் பெற்றோம்

# கூடைக்குள் தேசம்

ஆசிரியர் :
**சு. முரளிதரன்**

வெளியீடு :
மலையக வெளியீட்டகம்
57, மகிந்தா மாவத்தை
கொழும்பு - 6

விலை ரூபா 9-75

ஜப்பானில் பிறந்து ஆங்கில மொழி வழியாக பலமொழி இலங்கியங்களின் இடம் பிடித்து இப்போது தமிழிலும் வரத்தொடங்கி இருக்கிறது, 'ஹைக்கூ' கவிதைகள்.

மூன்றடிகள் கொண்டது இக் கவிதை வடிவம். மூன்று அடிகளையும் ஒரே மூச்சில் வாசித்து முடித்து விடக்கூடாது. முதல் இரண்டு அடிகளை மெதுவாகப் படித்து நிறுத்திக்கொள்ள வேண்டும். பிறகு தான் மூன்றாவது அடியைப் படிக்க வேண்டும்.

''எல்லாவற்றையும் வெளிப்படையாகச் சொல்லிக் கொண்டிருப்பது கவிதையின் வேலை இல்லை. கட்டுரையின் வேலை நம்மில் பலருக்கு இந்தக் கலைத் தத்துவம் புரிவதில்லை ஒரு காட்சியைக் காட்டுவதோடு 'ஹைக்கூ'வின் வேலை முடிந்துவிடும். அதில் உள்ள அர்த்தங்களைத் தோண்டி எடுத்துக் கொள்வது வாசகன் பொறுப்பு. இந்தவகையில் வாசகனும் கவிதையின் ஒருகூட்டுப் படைப்பாளி' என்று 'ஹைக்கூ' கவிதை குறித்து கவிஞர் அப்துல் ரஹ்மான் குறிப்பிட்டுள்ளார். இலங்கையின் இலக்கிய உலகில் 'ஹைக்கூ' கவிதைக்கு கவிஞர் சு. முரளிதரன் தன் 'கூடைக்குள் தேசம்' மூலம் வரவு கூறயிருக்கிறார்.

'கூடையைக் காக்க
கனக்கச் சுமந்து சென்றார்கள்
உள்ளே இந்த தேசம்'

என ஆரம்பிக்கிறது கவிதைத் தொகுதி. இக்கவிதையில் தாம்; கருத்துச் செறிவு எத்துணை? அந்த நாடே மலைத் தோட்டப் பொருளாதாரத்தில் தங்கி இருக்கிறது. தேயிலை செய்கையே அதன் முதுகெலும்பு ஆக அந்த தேசம் அந்த தேயிலைக் கொழுந்துக்குள்ளே அதைச் சுமக்கும் கூடைக்குள்ளே தங்கி இருக்கிறது - இதை மூன்றே வரிகளால் அடக்கி விளக்கி விடுகிறார் கவிஞர். இது தான் 'ஹைக்கூ' கவிதையின் சிறப்பும், இனிமையும்.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வையும், நிலைமைகளையும் அற்புதமாக படம் பிடித்துக் காட்டும் காட்டுகிறார்.

இப்படி பல கவிதைகள் மூலம் யதார்த்தத்தை - பல பொருளில் உள்ளடக்கி தன் சிந்தனை சிறகை பறக்க விட்டிருக்கிறார் கவிஞர்.

'ஹைக்கூ' கவிதை வடிவத்தின் மூலம் சமூக அவலங்களையும், அன்றாட பிரச்சனைகளை மாக அழகு பட சொல்வதோடு மட்டுமல்ல; அவற்றை சுட்டுப் பொசுக்கும் குமுறலையும் வெளிப்படுத்துகிறார்.

கண்டி பேராதனைப் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞான பீட மாணவரான முரளிதரன்,

(8-ம் பக்கம் பார்க்க)

Regd No. R.N. 42556/83 Regd No. TN/MS (C) 702

MAKKAL MARUVAZHVOO

மக்கள் மறுவாழ்வு

முகவரி :
அஞ்சல் பை எண். 5560
சென்னை - 600 094

# உண்ணாவிரதம் இருக்க முடிவு!

திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு ஆலையில் 1983 ஆண்டு பணியில் சேர்ந்த தாயகம் திரும்பிய தொழிலாளர்கள் 26 நபர்களை அவர்கள் பணியில் சேர்ந்து. 480 நாட்களில் நிரந்தரம் செய்ய வேண்டும் என்று மாநில அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. மாநில அரசு உத்தரவு படி இது வரையும் 26 நபர்களையும் நிரந்தரம் செய்யவில்லை இது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பல முறை மனு கொடுத்தும் ஒரு ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஆகவே 1983 ஆண்டு பணியில் சேர்ந்த 26 நபர்களையும் அரசு உத்திரவுப்படி 480 நாட்களில் நிரந்தரம் செய்து இது வரை உள்ள பாக்கி சம்பளத்தை கணக்கிட்டு 30-7-88 தேதிக்குள் கொடுக்கா விட்டால் 8-8-1988 தேதி தமிழ் நாள் கவனர் அலுவலக முன் தொடர் உண்ணா விரதம் இருப்பது என தீர்மானித்துள்ளனர்.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

இலக்கிய உலகில் இளைய தலைமுறையினராக எதிர்கால இலக்கிய செழுமைக்கு இவரது 'ஹைக்கூ' கவிதைகள் மூலம் கட்டியம் கூறுகிறார்,

இலங்கை மலையக எழுத்தாளர்களின் படைப்புகளை வெளி கொணர்வதில் முன் நிற்கின்ற மலையக வெளியீட்டகம் இத் தொகுதியை அழகுற வெளியிட்டிருக்கிறது.

கலை, இலக்கியத்தில் ஆர்வமுடைய அனைவரையும் இக் கவிதைகள் ஈர்த்து தன்வசப் படுத்திக் கொள்ளும் என்பதில் ஐயமில்லை.

-டி. எஸ். ஆர்.

## நீதிமன்றம் ஆணை

கொளப்பள்ளியில் தேயிலை தோட்டம் தமிழக அரசுக்கு சொந்தமானது. இங்கு சுமார் 800 தாயகம் திரும்பியோர் பணி புரிகின்றார்கள். இவர்களுக்கு பணி நிரந்தரம் மற்றும் தோட்டத்தொழிலில் சட்டப்படி சலுகைகள் வழங்கிட நடவடிக்கை எடுத்து தகவல் கொடுக்க வேண்டும்என கூடலூர் தோட்டத் தொழில் ஆய்வாளருக்கு சென்னை உயர்நீதி மன்றம் ஆணை பிறப்பித்துள்ளது இதற்கான ரிட் மனுவை, A.I.T.U.C சங்கத்தின் செயலாளர் டி பால கிருஷ்ணன் தாக்கல் செய்துள்ளார்.

## மருத்துவமனை திறக்கப்பட்டது

நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் பகுதியில் அதிகமாக தாயகம் திரும்பியவர்கள், மலை வாழ் மக்கள் மற்றும் பல்வேறு இனத்தவர்கள் சுமார் 30,000 பேர் வாழ்கின்றார்கள். இவர்களுக்கு மருத்துவ வசதி இல்லாத சூழ்நிலையில் பொதுமக்கள் துன்பபட்டத்தை கணக்கில் எடுத்து ஒரு ஆரம்ப சுகாதார அமைப்பு குழுவினை அனைத்து கட்சியின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது அதற்கு திரு. டி. பால கிருஷ்ணன் A.I.T.U.C. செயலாளர் தலைவராக தேர்தெடுத்தெடுத்தார்கள் முறைப்படி அரசுக்கு விண்ணப்பம் சமர்பித்தார்கள். அரசின் உத்தரவு பேரில். ரூபா 10,000 சுகாதார துறைக்கு செலுத்தப்பட்டது' பண முதலைகள் கொளப்பள்ளியில் இம் மருத்துவமனை வராது தடுக்க எடுத்த அனைத்து முயற்சிகளையும் முறியடித்து 1-7-88 ஆண்டு முதல் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை ஆரம்பிக்க அரசு உத்தரவு பிறப்பித்தது இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு திரு. வி. எஸ். ஜான் திரு. பி. எஸ். ஆப்ரகாம் திரு. என். இராமசாமி திரு. எஸ். சுயம்புலிங்கம் ஆகியோர் முன்னின்று செயல்பட்டனர் இவர்களுக்கும், தமிழக அரசுக்கும் மாவட்ட சுகாதார அலுவலர் அவர்களுக்குப் பொருதார உதவி வழங்கிய பொது மக்களுக்கும் நன்றி தெரிவித்து திரு டி. பாலகிருஷ்ணன் அறிக்கை வெளியிட்டார்.

இச்சுகாதார நிலையத்தில் தினத்திற்கு சுமார் 250 வெளி நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். இது இவ்வூர் மக்களுக்கு ஒரு வரபிரசாதமாகும். O

## கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை அமைக்க வேண்டுகோள்

நீலகிரி, கொளப்பள்ளியின் சுற்றிலும் தாயகம் திரும்பியோர் மற்றும் உள்ளூர் மக்கள் தேயிலை சிறுதோட்ட பயிரிட்டு தனியாருக்கு தேயிலை விற்று வருகின்றார்கள். இத்தேயிலையை கொளப்பள்ளியிலே தேயிலைத் தயார் செய்து கூட்டுறவு அடிப்படையில் செயல்பட ஒரு முன்மொழிவை அரசுக்கு திரு. டி. பாலகிருஷ்ணன் அனுப்பியுள்ளார். இத்தொழிற்சாலை அமைவதால், சுமார் 200 பேர்களுக்கு தொழிற்சாலையில் நிரந்தர வேலையும் சுமார் 1000 பேருக்கு மறைமுகமாக வேலையும் கிடைக்கும் என்பதனால் மக்கள் மத்தியில் நல்ல ஆதரவு இருக்கிறது.

O

Editor & Publisher : T. S. RAJU. 1. South Gangai Amman Koil 2nd Street, Madras - 600 094.
Printer : L. S. Srinivasan at Jai Kalidas Press. 29, B. E Colony, 4th Street, Madras - 600004.